நகராட்சி அலுவலகம்,

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி.

நாள் 24.04.2023

**சாதரணக்கூட்டம்**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி நகர்மன்றத்தின் சாதரணக்கூட்டம் எதிர்வரும் **2023**ம் வருடம் **ஏப்ரல்** மாதம் **28 ம்** தேதி **வெள்ளி கிழமை** காலை 10.30 மணியளவில் **நகர்மன்றத் தலைவர்** அவர்களின் தலைமையில் மன்றக் கூட்ட அரங்கில் வைத்து நடைபெறவிருக்கின்ற சாதாரணக் கூட்டத்திற்கான கூட்டப் பொருள்

**பொருள் எண்.1**

நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ROC.NO.32945/2022/EA2-SWM-4 நாள்.10.01.2023-ன்படி நகராட்சிப்பகுதியில் திடக்கழிவு மேலாண்மைப்பணிகளை, வெளிக்குணர்வு முகமை மூலம் (Out Sourcing) மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழுங்கப்பட்டுள்ளதை தொடர்ந்து, பணி மேற்கொள்ள வேண்டி 24.03.2023 அன்ற பெறப்பட்ட ஒப்பந்தப்புளிகளில் தொழில் நுட்ப உறைகள்(Technical Bid) 24.03.2023 அன்று திறக்கப்பட்டு. தொழில் நுட்ப ரீதியான தகுதிவாய்ந்த ஒப்பந்தக்காரர்களின் விலைவிகித ஒப்பந்தப்புள்ளி (Financial Bid) 01.04.2023 அன்று காலை 11.00 மணியளவில் திறக்கப்பட்டது. மேற்படி ஒப்பந்திப்புள்ளிகளின் விலைவிகித ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

| Sl.No | Item & Description | M/S.Saram Enviro Services Pvt Ltd, Chennai | M/S. R.K. Company, Perambulur |
|---|---|---|---|
| 1 | திடக்கழிவு மேலாண்மைப்பணிகளை, வெளிக்குணர்வு முகமை மூலம் (Out Sourcing) மேற்கொள்ளுதல் | ரூ.3978/- ஒரு டன்னுக்கு | ரூ.5100/- ஒரு டன்னுக்கு |

**அலுவலகக்குறிப்பு**

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள M/S.Saram Enviro Services Pvt Ltd, Chennai என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை அனுமதித்து சென்னை நகராட்சிகள் நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளவாறு 3 ஆண்டுகளுக்கு பணி மேற்கொள்ள பணி உத்திரவு வழங்கிடவும், அதற்கான செலவினத் தொகையினை இந்நகராட்சி பொத நிதி அல்லது 15வது நிதிக்குழு மான்ய நிதியில் இருந்து வழங்கிடவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண் : 270 / குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளM/S.Saram Enviro Services Pvt Ltd, Chennai நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளிக்கு மன்றம் அனுமதி வழங்கப்பட்டது. மேலும் சென்னை நகராட்சிகள் நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளப்படி 3 ஆண்டுகளுக்கு பணி மேற்கொள்ளவும் செலவினத்தை இந்நகராட்சி பொது நிதி மற்றும் 15வது நிதிக்குழு மான்ய நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்.2**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி அலுவலக நகர்மன்றத் தலைவர் அவர்களின் ஈப்பு வாகனம் TN76 T 9612 ல் பழுதான 4 டயர்களையும் மாற்றம் செய்து புதிய டயர்கள் பொருத்திக் கொடுக்கும் வகைக்கு வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் ஒப்பு நோக்குப்பட்டியல் மன்றத்தின் அனுமதிக்கு

| Sl.No | Item & Description | Qty | Vinayaga Auto Mobiles, Tuckerammalpuram | 8SRI Durga Auto Mobiles, Tirunelveli | Success Auto Mobiles. Tirunelveli |
|---|---|---|---|---|---|
| 1 | BridgeStone Tyre 215/75R15 D689TK (With Wheel Alignment & Mouth ) for TN 76 T 9612 | 5 nos | Rs.8000/- (Per Tyre+ mouth) | Rs.8525/- (Per Tyre+ Mouth) | Rs.8560/- (Per Tyre+Mouth) |

**அலுவலகக்குறிப்பு**

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி கெடுத்துள்ள **விநாயாக ஆட்டோ மொபைல்ஸ்**, தக்கரம்மாள்புரம் என்பவரின்விலைப்புள்ளியை ஏற்று நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கும், செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்தமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண் : 271 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்.3**

நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ROC.NO.32945/2022/EA2-SWM-4 நாள்.10.01.2023-ன்படி நகராட்சிப்பகுதியில் திடக்கழிவு மேலாண்மைப்பணிகளை, வெளிக்குணர்வு முகமை மூலம் (Out Sourcing) மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதை தொடர்ந்து, பணி மேற்கொள்ள வேண்டி ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை, ஒப்பந்தப்புள்ளி விதிமுறைகளின்படி,ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை மாநில அளவிலான செய்தி தாள் மற்றும் மாநில ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரில் வெளியிட, இயக்குநர் செய்தி மக்கள் தொடர்பு துறை அலுவலர் சென்னை அவர்களின் வெளியீட்டு ஆணை எண் 794 நாள் 05.02.2023 ன் படி, வெளியிடப்பட்ட வகைக்கு, பட்டியல் தொகை ரூ.51206/- மட்டும் Accord Advertising Agebcies நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலகக்குறிப்பு**

ஒப்பந்தப்புள்ளி விதிமுறைகளுக்குட்பட்டு, ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பின, மாநில அளவிலான செய்தி தாள் மற்றும் மாநில ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரில் இயக்குநர் செய்தி மக்கள் தொடர்பு துறை அலுவலர் சென்னை அவர்களின் வழியாக வெளியிடப்பட்டுள்ளதால், பட்டியல் தொகை ரூ. .51206/- மட்டும் Accord Advertising Agebcies நிறுவனத்திற்கு இந்நகராட்சி பொது நிதியில் இருந்து வழங்கிட மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண் : 272 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்.4**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி அலுவலக ஈப்பு வாகனம்(JEEP) TN 76 A 9061 , பராமரிப்பு பணி மேற்கொள்ளப்பட்டு பத்தாயிரம் கி.மீ கடந்து விட்டதால், மேற்கண்ட வாகனத்தை பொது பராமரிப்பு பணி மேற்கொள்ள வேண்டி, ஓட்டுநர் அவர்களால், குறிப்பு பெறப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட வாகனத்தை பொது பராமரிப்பு பணி மேற்கொள்ளவும், அதற்கான செலவினத் தொகையினை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்திடவும் மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலகக்குறிப்பு**

வாகனத்தின் அவசியம் கருதியும், வாகனம் பத்தாயிரம் கி.மீ கடந்து பயன்படுத்தப்பட்டு வருவதாலும், பொது பராமரிப்பு பணி மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண் : 273 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்.5**

இந்நகராட்சியின் பொதுசுகாதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு பயன்படுத்தப்பட்டு வரப்பெற்ற வாகனங்களுக்கும், ஆட்டோக்களுக்கும் தகுதிசான்று பெறுவதற்கும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்கும் பொதுநிதியில் இருந்து செலவுகள் செய்வதற்கு இந்நகர் மன்றம் தனது தீர்மானம் எண்:81 நாள்: 29.06.2022 அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தற்போது இந்நகராட்சியின் பொதுசுகாதாரப்பிரிவில் உள்ள வாகனம் TN 76 AX 1658 க்கு பழுதுபார்ப்பு பணிகள் செய்வதற்கும் அவசரஅவசியம் கருதி குறுகியகால விலைப்புள்ளி கோராப்பட்டதில் ல் கீழ்கண்டவாறு விலைப்புள்ளி வரப்பெற்றுள்ளது.

| வ,எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை |
|---|---|---|
| 1 | ஆர்விஆர் மோட்டார் ஒர்க்ஸ் அம்பாசமுத்திரம் | ரூ.1,11,592.00 |
| 2 | நம்பி மோட்டார் ஒர்க்ஸ், திருநெல்வேலி | ரூ.1,13,800.00 |
| 3 | பிரபா மோட்டார் ஒர்க்ஸ், அம்பாசமுத்திரம் | ரூ.1,18,150.00 |

அலுவலககுறிப்பு:

1. மேற்கண்ட விலைப்புள்ளிகளில் மிகக்குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள வரிசை எண்.1 ல் உள்ள **ஆர்விஆர் மோட்டார் ஒர்க்ஸ்**, அம்பாசமுத்திரம் என்பவரின்விலைப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்
2. அவசரம் அவசியம் கருதி பொதுசுகாதாரம் பணிகள் பாதிக்கப்படாமலும், பொதுமக்களின் நலன் கருதி நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் இந்நகர்மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண் : 274 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்.6**

இந்நகராட்சியின் பொதுசுகாதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு பயன்படுத்தப்பட்டு வரப்பெற்ற வாகனங்களுக்கும்,ஆட்டோக்களுக்கும் தகுதிசான்று பெறுவதற்கும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்கும் பொதுநிதியில் இருந்து செலவுகள் செய்வதற்கு இந்நகர் மன்றம் தனது தீர்மானம் எண்:81 நாள்: 29.06.2022 அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தற்போது இந்நகராட்சியின் பொதுசுகாதாரப்பிரிவில் உள்ள வாகனம் TN76AX 1598 க்கு பழுதுபார்ப்பு பணிகள் செய்வதற்கும் அவசரஅவசியம் கருதி குறுகியகால விலைப்புள்ளி கோராப்பட்டதில் 21.02.2023 கீழ்கண்டவாறு விலைப்புள்ளி வரப்பெற்றுள்ளது.

| வ,எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை |
|---|---|---|
| 1 | ஆர்.வி.ஆர் மோட்டார் ஒர்க்ஸ் | ரூ.98802.00 |
| 2 | நம்பி மோட்டர்ஸ் ஒர்க்ஸ் | ரூ.102300.00 |
| 3 | பிரபா மோட்டர்ஸ் ஒர்க்ஸ் | ரூ.106850.00 |

அலுவலககுறிப்பு:

1. மேற்கண்ட விலைப்புள்ளிகளில் மிகக்குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள வரிசை எண்.1 ல் உள்ள **ஆர்.வி.ஆர் மோட்டார் ஒர்க்ஸ்** அம்பாசமுத்திரம் என்பவரின் விலைப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்
2. அவசரம் அவசியம் கருதி பொதுசுகாதாரம் பணிகள் பாதிக்கப்படாமலும், பொதுமக்களின் நலன் கருதி நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் இந்நகர்மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண் : 275 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்.7**

வழக்கு எண் W.A.(MD) . No 279/2013 க்கு இவ்வலுவலக காலி பணியிடமான அலுவலக உதவியாளர் மற்றும் கிளினர் பணியிடத்தில் பணி வழங்கிட கோரி எம்.வி. கண்ணன் என்பவரால் தொடரப்பட்ட வழக்கிற்கு உண்டான வழக்கு கட்டணம் ரூ 11000/- ம் வழங்கிடவும்

வழக்கு எண் W.P.(MD) .No 13955/2021 க்கு இந்நகராட்சி கிராமம் I சர்வே எண் 712/2 ல் இந்நகராட்சியால் கட்டப்பட்டு வரும் சமுதாயநல கூடம் கட்டுமானம் தொடர்பாக ஜே.பி. சவுந்தர்ராணி என்பவரால் தொடரப்பட்ட வழக்கிற்கு உண்டான வழக்கு கட்டணம் ரூ 11000/- ம் வழங்கிடவும்

வழக்கு எண் Cont..P.(MD) . No 172/2014 க்கு இந்நகராட்சி ஆணையாளர் திரு. ஆயூப்கான் அவர்கள் மீது எஸ்.எஸ். ஆறுமுகம் என்பவரால் தொடரப்பட்ட Contempt Petition வழக்கிற்கு உண்டான வழக்கு கட்டணம் ரூ 11000/- ம் வழங்கிடவும்

வழக்கு தொடர்பாக வழக்கறிஞர் திரு. ஆறுமுகம் அவர்களிடம் சட்ட கருத்துரு வழங்க கோரி இவ்வலுவலக கடிதம் ந.க.எண் 1787/2020/A1, நாள் 03.09.2021ன்படி கருத்துரு வழங்கப்பட்டமைக்கு உண்டான கட்டணம் ரூ 5000/-ம் வழங்கிடகோரி வழக்கறிஞர் திரு H . ஆறுமுகம் என்பவரிடமிருந்து கேட்பு வரபெற்றுள்ளது

. எனவே மேற்கண்ட வழக்குகளுக்கு, வக்காளத்து எதிர் வாதுறை, வழக்குக்கான ஆவணங்களை நகல் எடுத்தல் மற்றும் சட்ட கருத்துரு பெற்ற வகைக்கு உண்டான கட்டணங்கள் ரூ.38000/- அவசர அவசியம் கருதி வழக்கறிஞர் திரு. H. ஆறுமுகம் என்பவருக்கு வழங்குவதற்கு நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வழங்கப்பட்டமைக்கு நகர் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கு

அலுவலககுறிப்பு:

அரசு வழக்கறிஞருக்கு வழக்கு கட்டணம் நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று இந்நகராட்சி பொது நிதியில் இருந்து செலவினம் மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 276 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்.8**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சிகுட்பட்ட காரையாறு சின்ன மயிலாறு காணிக்குடியிருப்பு பகுதியில் 9 எண்ணம் எல் இ டி விளக்கு பொருத்த வேண்டி, வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளின் ஒப்நோக்கு பட்டியல் மன்றத்தின் அனுமதிக்கு

| வ.எண் | பொருட்களின் விவரம் | எண்ணிக்கை | ஷா ஜெகன்லால்ஜெயந்திலால் ஜெயின், திருநெல்வேலி | மாலினி லைட்டிங் கம்பெனி திருநெல்வேலி | மஹாவீர் எல்க்ட்ரிக்கல், திருநெல்வேலி |
|---|---|---|---|---|---|
| 1 | தெருவிளக்கு மீட்டர்/மெயின் சுவிட்ச் பாக்ஸ், உட்டன் போர்டு, போல் கிளாம்பு, நட்டு மற்றும் மாஸ்ர் கீ செட் | 1 எண்ணம் | Rs.7330/- | Rs.7660/- | Rs.8000/- |
| 2 | 10 அடி ஜிஐ பைப் மற்றும் பிட்டிங்ஸ் | 1 எண்ணம் | Rs.1610/- | Rs.1700/- | Rs.1800/- |
| 3 | தெருவிளக்கு பொருத்த தேவையான ஜிஐ பைப் பெண்ட் மற்றும் பிட்டிங்ஸ் | 1 எண்ணம் | Rs.784/- | Rs.850/- | Rs.900/- |
| 4 | 7/20 காப்பர் கேபிள் | 1 காயில் | Rs.7100/- | Rs.7500/- | Rs.8500/- |
| 5 | 25வாட்ஸ் தெருவிளக்கு பிட்டிங் செட் | 1 எண்ணம் | Rs.2450/- | Rs.2600/- | Rs.2750/- |

அலுவலககுறிப்பு:

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள ஷா ஜெகன்லால்ஜெயந்திலால் ஜெயின், திருநெல்வேலி அவர்களின் விலைப்புள்ளியினை நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் அனுமதிக்கப்பட்ட விலைவிகிதத்திற்குட்பட்டுள்ளதால், மன்ற அனுமதியை எதிர்நோக்கி

நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டதற்கும், செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்திடவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண் : 277 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்.9**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சியில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் காலை உணவு திட்டம் 2022-23 ன் கீழ் நகராட்சி பகுதியில் காலை சிற்றுண்டி வழங்கும் திட்டத்திற்கு ஒருங்கிணைந்த சமையற் கூடம் அமைத்தல் பணிக்கு 06.04.2023 அன்று வரப்பெற்ற ஓப்பந்தப்புள்ளிகளின் ஓப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் அனுமதிக்கு

| வ.எண் | பணியின் பெயர் | ஓப்பந்தக்காரர் பெயர் | மதிப்பீட்டு விலைவிகித விவரம் |
|---|---|---|---|
| 1 | முதலமைச்சரின் காலை உணவுத்திட்டம் **2022–23** விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பகுதியில் காலை சிற்றுண்டி வழங்கும் திட்டத்திற்கு ஒருங்கிணைந்த சமையற் கூடம் அமைத்தல்<br>மதிப்பீடு ரூ. 25.00/- இலட்சம் | திரு. கே.ராஜா<br>காளிபார்விளை<br>டாணா விக்கிரமசிங்கபுரம் | 0.10 %<br>மதிப்பீட்டைவிட<br>குறைவு |
| | | திரு. வெங்கட் பெருமாள் சுப்பையா<br>ஓப்பந்தகாரர்<br>திருமாள்நகர், பெருமாள்புரம் | 1.10 %<br>மதிப்பீட்டைவிட<br>அதிகம் |

**அலுவலகக்குறிப்பு**

வரபெற்ற இரண்டு ஓப்பந்தப்புள்ளிகளில்., குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள ஓப்பந்தக்காரர் திரு. கே.ராஜா, விக்கிரமசிங்கபுரம் என்பவரின் ஓப்பந்தப்புள்ளியை பணியின் அவசரம் மற்றும் அவசியம் கருதி, நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கும், இதற்கான செலவினத் தொகையினை பொது நிதி 2023-24 ல் இருந்து செலவினம் மேற்கொள்ளவும், திட்டத்திற்கென நிதி ஓதுக்கீடு பெறப்பட்டால் அதனை பொது நிதியில் ஈடு செய்திடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 278 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்.10**

திருநெல்வேலி மாவட்டம் விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பகுதியில் அமைந்துள்ள , ஊராட்சி ஓன்றியத்திற்கு பாத்தியப்பட்ட கீழ்க்காணும் பள்ளிகளை நகராட்சியின் வசம் ஓப்படைப்பு செய்து அனுமமியளித்து திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண் ந7/35599/2022 நாள் 24.04.2023 ன்படி உத்திரவிடப்பட்டுள்ளது, மன்றத்தின் பார்வைக்கு

| வ.எண் | ஊராட்சி ஓன்றியம் | கட்டிடத்தின் விவரம் |
|---|---|---|
| 1 | அம்பாசமுத்திரம் | சன்னதி தெரு பஞ்சாயத்து யூனியன் நடுநிலைப்பள்ளி |
| 2 | அம்பாசமுத்திரம் | அனவன் குடியிருப்பு பஞ்சாயத்து யூனியன் தொடக்கப்பள்ளி |
| 3 | அம்பாசமுத்திரம் | அய்யனார்குளம், பஞ்சாயத்து யூனியன் தொடக்கப்பள்ளி |
| 4 | அம்பாசமுத்திரம் | காரையார், பஞ்சாயத்து யூனியன் தொடக்கப்பள்ளி |
| 5 | அம்பாசமுத்திரம் | சேர்வலார், பஞ்சாயத்து யூனியன் தொடக்கப்பள்ளி |
| 6 | அம்பாசமுத்திரம் | லோயர் டேம்,, பஞ்சாயத்து யூனியன் நடுநிலைப்பள்ளி |

**அலுவலககுறிப்பு:**

மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் உத்திரவின்படி, ஊராட்சி ஓன்றியத்தில் இருந்து மேற்கண்ட 6 எண்ணம் பள்ளிகளை விக்கிரமசிங்கபுரம் நகராட்சி க்கு பெற்றுக்கொண்டு , நகராட்சி மூலம் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண் : 279 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**ஓம்/- திரு.மா.செல்வசுரேஷ்பெருமாள்**

**நகர்மன்றத்தலைவர்**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி

This document was created with the Win2PDF “Print to PDF” printer available at

https://www.win2pdf.com

This version of Win2PDF 10 is for evaluation and non-commercial use only.
Visit https://www.win2pdf.com/trial/ for a 30 day trial license.

This page will not be added after purchasing Win2PDF.

https://www.win2pdf.com/purchase/